முறைப்படி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு எழுதினால், அவற்றைப் போக்க முயற்சிக்கலாம். எனவே சிக்கல்கள் ஏற்பட வேண்டாம் என்று ஒரே முறையைக் கையாள வேண்டும் என்று முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, "ஆன் எ பாயிண்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன்.'' . . .

Mr. CHAIRMAN : Only the Member who called the attention of the Minister can seek clarification and no other Member can speak. The hon. Member may please resume his seat.

(2) வேலூர் நகரத்தில் கல்லூரி மாணவர்கள் வேலூர் கோட்டை வெளியில் உண்ணாவிரதம் இருப்பது.

திரு. கே. ராஜாராம், திரு எல். பலராமன் சார்பில் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் நகரத்தில் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் வேலூர் கோட்டை வெளியில் 100 பேர் உண்ணாவிரதம் இருப்பதையும், அதனால் சில மாணவர்கள் மயக்க நிலை எய்தியும், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டும், பல மாணவர்கள் மேலும் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருப்பதையும், இதனால் கல்லூரிகள் மூடப்பட்டும், உயர்நிலைப் பள்ளிகள் மூடப்பட்டும் இருப்பதால், அங்கு வேறு நிலைகள் ஏற்படுமோ என்ற ஐய நிலை இருப்பதையும் குறித்து".

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, இக் கவன ஈர்ப்புத் தீர்மானம் சில அரிசன மாணவர்கள் வேலூரில் நடத்திய ஆர்ப்பாட்டம் பற்றியது. எனினும், அவ்வார்ப்பாட்டத்தின் மூலகாரணம் திருச்சியில் சென்ற 12—11—73 அன்று சில அரிசன மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் தொடர்பானதினால் அதைப்பற்றி முதலில் கூற விரும்புகிறேன்.

அண்மையில் 12—11—73 அன்று திருச்சியில் சில அரிசன கல்லூரி மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது சம்பந்தமாக சில கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இது சம்பந்தமாக அங்கு சில மாணவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கிளர்ச்சி செய்தனர். அதுபற்றிய விவரத்தைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

கல்லூரியில் படிக்கும் இந்து அரிசன மாணவர்களுக்கு மத்திய அரசு விதி முறைகளின்படி உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இவ் வுதவித் தொகையில், உண்டு, உறைவிடக் கட்டணமும், புத்தகங்கள்

நோட்டுகளுக்கான செலவும் அடங்கியது. இம்மாணவர்கள் அரிசன நல விடுதிகளில் தங்கினுல் அவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையிலிருந்து உண்டு, உறைவிடச் செலவுத் தொகை போக மீதியைத்தான் விதிமுறைப்படி அவர்களுக்கு அளிக்க வேண்டும். இவ்விதி முறையைச் சரிவரச் செயற்படுத்தும்படி எல்லா மாவட்ட நல அலுவலர்களுக்கும் அறிவுரைகள் அரிசன நல இயக்குநரால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் திருச்சி மாவட்டத்தில் இவ்விதி முறையைச் சரிவர செயல்படுத்தாமல், அத்தகைய மாணவர்களுக்கு உணவு விடுதியில் தங்கிப் படிக்காத மாணவர்களுக்கு வழங்கும் விகிதத்தில் உதவித்தொகை தவறுதலாக வழங்கப்பட்டு விட்டது. இத்தவறை உணர்ந்த பின்னர், மாவட்ட நல அலுவலர் விதி முறைகளைச் சரிவரச் செயல்படுத்த முயன்ற போது, இதை ஆட்சேபித்து அங்கு சில மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். இது சம்பந்தமாக எனக்குத் தகவல் கிடைத்தவுடன் திருச்சி மாவட்ட ஆட்சியாளருடன் தொலைபேசி மூலம் கலந்து பேசினேன். என்னிடம் இதுபற்றி தொலை பேசி மூலம் தொடர்பு கொண்ட மாணவருடனும் நிலைமையை நன்கு விளக்கிப் பேசிய பிறகு மாணவர்கள் கிளர்ச்சியைக் கைவிட்டனர். பின்னர் சில மாணவர்கள் சென்னை வந்து நேரில் என்னைச் சந்தித்தனர். மாணவர்கள் உள்ள நிலையைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட கூடுதல் உதவித் தொகையைத் திரும்பப் பெறுமலிருக்க வேண்டுமென்று கோரினர். அவர்களது கோரிக்கை அனுதாபத்துடன் கவனிக்கப்படும் என்றும் மாணவர்களுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் முடிவு எடுக்கப்படும் என்றும் கூறினேன். மாணவர்களும் திருப்தியுடன் திருச்சிக்குத் திரும்பிச் சென்றனர்.

திருச்சி மாவட்டத்தில் நடந்த இக்கிளர்ச்சிதான் அண்டை மாவட்டங்களில் கிளர்ச்சி நடக்கக் காரணமாக அமைந்தது. இச் சூழ்நிலையில்தான் 19—11—73 அன்று வேலூரிலும் சில அரிசன மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களது முக்கிய கோரிக்கை தங்களுக்கு உதவித் தொகையில் உண்டு உறைவிடச் செலவைக் குறைக்காமல் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

விதி முறைகளை மாணவர்களுக்கு விளக்கி, உள்ள நிலைமையைப் புரிந்து கொண்டு கிளர்ச்சியைக் கைவிட மாணவர்களுக்கு அறிவுரை வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளருக்குத் தொலைபேசி மூலம் கூறினேன். என் அறிவுரைப்படி மாவட்ட ஆட்சியாளர் முயற்சியினை மேற்கொண்டார். இதற்கிடையில் 20—11—73 அன்று சில மாணவர்கள் பசிக் களைப்பால் மயக்கமடைந்து, அவர்களுக்கு உடனே மருத்துவ வசதி அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியாளரின் விளக்கத்தைக் கேட்டு மாணவர்களும் 21—11—73 அன்று கிளர்ச்சியைக் கைவிட்டனர். பசிக் களைப்பால் மயக்கமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் 21—11—73 அன்று குணமடைந்தபடியால் திரும்பிப்போனுர்கள்.

இக் கிளர்ச்சியின் விளைவாக வேலூரில் கல்லூரிகளோ உயர்நிலைப் பள்ளிகளோ மூடப்படவில்லை. அங்கு அமைதியான நிலைமை நீடித்து வருகின்றது.